**பட்டியல் கண்ட ஜாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர்**
**வன்கொடுமைக்கு எதிராக விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம், நாமக்கல்**

**முன்னிலை: திருமதி.P.சாந்தி, M.A., L.L.M.,**
**அமர்வு நீதிபதி,**
**சிறப்பு நீதிமன்றம், நாமக்கல்**

2025 ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 12 ம் நாள் வெள்ளிக்கிழமை

**சிறப்பு அமர்வு வழக்கு எண்.19/2025**
**(CNR.No.TNNM12-000117-2025)**

**படிவம் ஏ**

| | | |
|---|---|---|
| 1 | குற்றம் முறையிடுபவர் | அரசுக்காக காவல் துணை கண்காணிப்பாளர்,<br>வேலக்கவுண்டம்பட்டி காவல் நிலையம்<br>**குற்ற எண்.154/2024** |
| 2 | **சிறப்பு அரசு வழக்கறிஞர்** | **திரு. V.செல்வராஜ்** |
| 3 | **எதிரிகளின் பெயர்** | 1.கோபாலகிருஷ்ணன் (43), த/பெ.மணி,<br>2/30, வன்னியர்தெரு, லத்துவாடி,<br>திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் மாவட்டம்.<br>2.ஜெகநாதன் (55), த/பெ.மாரிமுத்து,<br>2/67, வன்னியர்தெரு,<br>லத்துவாடி, நல்லகுமாரபாளையம்,<br>திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் மாவட்டம். |
| **4** | **எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்** | 1-வது எதிரி - திரு.V.ராமசெழியன்<br>2-வது எதிரி – திரு.A.நல்லசிவம் |

**படிவம் பி**

| | | | |
|---|---|---|---|
| 5 | சம்பவம் நடந்த நாள் | | 13.11.2024 |
| 6 | புகார் கொடுத்த நாள் | | 17.11.2024 |
| 7 | குற்றச்சாட்டு வனையப்பட்ட நாள் | | 06.06.2025 |
| 8 | முதல் விசாரணை ஆரம்பித்த தேதி | | குறுக்கு விசாரணை முடிவுற்ற தேதி |
| | அ.சா.1. | 04.08.2025 | 04.08.2025 |
| | அ.சா.2. | 11.09.2025 | 11.09.2025 |
| | அ.சா.3. | 11.09.2025 | 11.09.2025 |
| | அ.சா.4. | 11.09.2025 | 11.09.2025 |

| | | | |
|---|---|---|---|
| | அ.சா.5. | 11.09.2025 | 11.09.2025 |
| | அ.சா.6. | 22.09.2025 | 22.09.2025 |
| | அ.சா.7. | 22.09.2025 | 22.09.2025 |
| | அ.சா.8. | 22.09.2025 | 22.09.2025 |
| | அ.சா.9 | 30.09.2025 | 30.09.2025 |
| | அ.சா.10 | 08.10.2025 | 08.10.2025 |
| | அ.சா.11 | 04.11.2025 | 04.11.2025 |
| | அ.சா.12 | 14.11.2025 | 14.11.2025 |
| 9 | மனுக்களின் விவரம் | இல்லை | |
| 10 | தீர்ப்புரை நாள் | | 12.12.2025 |
| 11 | தீர்ப்புரை நகல் வழங்கப்பட்ட நாள் | | -- |
| 12 | காலதாமதத்திற்கான காரணம் | | -- |

**எதிரிகள் பற்றிய விபரம்**

| எதிரிகள் வரிசை | எதிரிகளின் பெயர் | கைது செய்யப் பட்ட நாள் | பிணையில் சென்ற நாள் |
|---|---|---|---|
| எதிரிகள் | 1.கோபாலகிருஷ்ணன்<br>2.ஜெகநாதன் | | |

| | |
|---|---|
| எதிரிகள் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டு | பாரதிய நீதிச் சட்டப் பிரிவுகள் 332(C), 75(1)(ii), 132 உ/இ 3(1)(r), 3(1)(s), 3(2)(va) of SC & ST (POA) Amendment Act 2015 |
| விடுதலை (அ) தண்டனை | **இறுதியாக,** 1 மற்றும் 2 எதிரிகளுக்கு எதிராக பாரதிய நீதிச் சட்டப் பிரிவுகள் 332(C), 75(1)(ii), 132 உ/இ 3(1)(r), 3(1)(s), 3(2)(va) of SC & ST (POA) Amendment Act 2015-ன் கீழ் முன்வைப்பப்பட்டுள்ள குற்றசம்பவம் அரசு தரப்பால் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என முடிவு செய்து, சந்தேகத்தின் பலன்களை எதிரிகளுக்கு நல்கி எதிரிகளை மேற்படி |

| | |
|---|---|
| | பிரிவுகளின் கீழ் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து பாரதிய நாகரீக சுரக்ஷா சன்ஹிதா சட்டப் பிரிவு 258–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. |
| சொத்து குறித்த உத்தரவு | இவ்வழக்கில் சான்றுப்பொருட்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. |
| தண்டனை குறித்த விபரம் | இல்லை |
| விசாரணையின் போது எதிரி காவலிலிருந்த நாட்களை குவிமுச 428 பிரிவின் கீழ் கழிக்கப்பட்ட விபரம். | –– |

இவ்வழக்கானது கடந்த 18.11.2025ம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்தபோது குற்றமுறையீட்டாளர் தரப்பில் கற்றறிந்த சிறப்பு அரசு தரப்பு வழக்கறிஞர் திரு.V.செல்வராஜ் அவர்களும், 1–வது எதிரி தரப்பில் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.ராமசெழியன் (Chief DLSA) அவர்கள் முன்னிலையாகியும், 2வது எதிரி தரப்பில் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.நல்லசிவம் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், சாட்சியங்கள் மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## தீர்ப்புரை

**குற்ற அறிக்கையின் சுருக்கம்–**

கடந்த 13.11.2024 தேதி மதியம் சுமார் 02.00 மணியளவில் வேலகவுண்டம்பட்டி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட லத்துவாடி ஊராட்சி மன்ற அலுவலகத்திற்குள் 1ம் எதிரி அத்துமீறி உள்ளே நுழைந்ததன் காரணமாக 1ம் எதிரி மீது பாரதிய நீதிச் சட்டப்பிரிவு 332(C)–ன் கீழும், மேற்படி சம்பவத்தின்

தொடர்ச்சியாக 1ம் எதிரி சாட்சி சுபாவை பார்த்து "சிரிக்கமாட்டீர்களா, எனக்கு கம்பெனி கொடுக்கமாட்டீங்களா" என ஆபாசமாக பேசி பாலியல் நோக்கத்திற்காக அழைத்து பாலியல் தொந்தரவு செய்த குற்றத்திற்காக 1ம் எதிரி பாரதிய நீதிச் சட்டப்பிரிவு 75(1)(ii)–ன் கீழும், மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக பட்டியலில் கண்ட ஜாதியனர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் வகுப்பைச் சாராத 1ம் எதிரி, பட்டியலில் கண்ட ஜாதியனர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த சாட்சி கலைச்செல்வியை பார்த்து " சிரிக்கமாட்டீர்களா, எனக்கு கம்பெனி கொடுக்கமாட்டீங்களா " என ஆபாசமாக பேசி பாலியல் நோக்கத்திற்காக அழைத்து பாலியல் தொந்தரவு செய்த குற்றத்திற்காக 1ம் எதிரி மீது பாரதிய நீதிச் சட்டப்பிரிவு 75(1)(ii) உ/இ 3(2)(va) of SC & ST (POA) Amendment Act 2015–ன் கீழும், மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக 1ம் எதிரி, சாட்சி சுபாவை அரசு பணியை செய்யவிடாமல் " நான் உள்ளே இருந்து போராட்டம் செய்வேன் நான் வெளியில் செல்லமாட்டேன் " எனக் கூறி குற்றமுறு வன்முறை மூலம் அரசு பணியை செய்யவிடாமல் தடுத்த குற்றத்திற்காக 1ம் எதிரி பாரதிய நீதிச் சட்டப்பிரிவு 132ன் கீழும், மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக 2ம் எதிரி ஊராட்சி மன்ற அலுவலகத்திற்குள் அத்துமீறி உள்ளே நுழைந்ததன் காரணமாக 2ம் எதிரி பாரதிய நீதிச் சட்டப்பிரிவு 332(C)–ன் கீழும், மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக 2ம் எதிரி, 1ம் எதிரியிடம் என்ன பிரச்சனை என்று கேட்டு விட்டு, 2ம் எதிரி, சாட்சி கலைச்செல்வி பட்டியலினத்தைச் சார்ந்தவர் என தெரிந்தே, அவரை அவமானப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் அவரை பார்த்து **"சக்கிலிச்சி நீ உனது வேலையைப் பார்"** என்று சொல்லி பொது இடத்தில் வைத்து சாதி பெயரைச் சொல்லி திட்டி இழிவுபடுத்தியதன் காரணமாக 2ம் எதிரி பிரிவு 3(1)(r), 3(1)(s) of SC & ST (POA) Amendment Act 2015–ன் கீழும் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மேற்படி வழக்கானது Spl.S.C.No.19/2025 ஆக கோப்பில் எடுக்கப்பட்டு எதிரிகளுக்கு சம்மன் சார்வு செய்யப்பட்டு, எதிரிகள் இவ்வழக்கில் ஆஜரானவுடன் எதிரிகளுக்கு அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் சட்டப் பிரிவு 230 of BNSS ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டும், அரசு தரப்பு சிறப்பு குற்றத்துறை வழக்கறிஞர் அரசு தரப்பு வழக்கை நிரூபணம் செய்வதற்காக முன்னிடப்படவுள்ள சாட்சிகளையும், ஆவணங்களின் பட்டியலையும் தாக்கல் செய்தபின்னர், இருதரப்பு வாதுரைகளும் கேட்கப்பட்டு, எதிரிகள் மீது குற்றச்சாட்டுக்கள் வனைய போதிய முகாந்திரம் இருப்பதாக இந்நீதிமன்றம் கருதியதால் எதிரிகள் மீது பாரதிய நீதிச் சட்டப் பிரிவுகள் 332(C), 75(1)(ii), 132 உ/இ 3(1)(r), 3(1)(s), 3(2)(va) of SC & ST (POA) Amendment Act 2015-ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து விளக்கிக் கூறி வினவியபோது, எதிரிகள் தங்கள் மீதான குற்றச்சாட்டினை மறுத்தனர். வழக்கை விசாரிக்க வேண்டும் என கோரினார்கள். எனவே அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்திரவிடப்பட்டது.

3. அரசு தரப்பு வழக்கை நிரூபணம் செய்யும் பொருட்டு அ.சா.1 முதல் அ.சா.12 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.13 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. இவ்வழக்கில் சான்றுப்பொருட்கள் குறியீடு செய்யப்படவில்லை. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

4. <u>அரசு தரப்பு சாட்சிகளின் சாராம்சங்கள் சுருக்கம்:-</u>

i) இவ்வழக்கின் காவல் உதவி ஆய்வாளரான அ.சா.10 திரு.பழனி கடந்த 13.11.2024 அன்று கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் தானும், முதல்நிலை காவலர் 1588 சத்யராஜும், லத்துவாடி ஊராட்சி மன்ற அலுவலகம் சென்று விசாரித்தபோது, அங்கு கோபாலகிருஷ்ணன் என்பவர் உள்ளே

இருந்ததாகவும், அலுவலகத்திற்கு வெளியே ஜெகநாதன் நின்று கொண்டிருந்ததாகவும், தான் விசாரித்தபோது கோபாலகிருஷ்ணன் உள்ளிருப்பு போராட்டம் நடத்தபோவாக சொன்னதாகவும், கோபாலகிருஷ்ணன் மற்றும் ஜெகநாதனிடம் காவல் நிலையத்தில் புகார் அளிக்குமாறு சொல்லிவிட்டு வந்துவிட்டதாகவும், கலைசெல்வி என்பவரிடமும் அலுவலகத்தை பூட்டிவிட்டு புகார் கொடுக்குமாறு சொன்னதாகவும், கலைசெல்வி என்பவர் 17.11.2024 அன்று காவல் நிலையம் வந்து அ.சா.ஆ.1 புகார் கொடுத்ததாகவும், அதன் பேரில் புகார் மனு ஏற்பு ரசீது 183/2024 அ.சா.ஆ.5 பதிவு செய்ததாகவும், இது சம்மந்தமாக காவல் துணை கண்காணிப்பாளர் தன்னை விசாரித்ததாகவும் கூறியுள்ளார்.

ii) அ.சா.11 காவல் ஆய்வாளர் கடந்த 20.11.2024 அன்று வேலகவுண்டம்பட்டி வட்ட காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது, நிலைய மனுரசீது எண்.183/2024, நாள் 17.11.2024 மனு ரசீது வழங்கிய அ.சா.10 பழனி என்பவர் பதிவு செய்திருந்த CSR–ன் புகார்தாரர் கலைசெல்வி என்பவரின் புகாரை தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, 20.11.2024 அன்று 11.00 மணிக்கு வேலகவுண்டம்பட்டி காவல் நிலைய குற்ற எண்.154/2024, BNS பிரிவுகள் 132, 75(1)(2) r/w 3(2)(va) of SC/ST (PoA) Act முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.6 பதிவு செய்ததாகவும், மேற்படி வழக்கு சாதிய வன்கொடுமை வழக்கு என்பதால் புலன் விசாரணை அதிகாரியை நியமிக்க வேண்டி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் அனுப்பியதாகவும், முதல் தகவல் அறிக்கை மற்றும் புகாரின் அசலை சிறப்பு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், இது சம்மந்தமாக காவல் துணை கண்காணிப்பாளர் தன்னை விசாரித்ததாகவும் கூறியுள்ளார்.

iii) அ.சா.12 காவல் துணை கண்காணிப்பாளர், கடந்த 20.11.2024 தேதியிட்ட C.No.G4/964/23129/2024 என்ற செயல்முறை ஆணை அ.சா.ஆ.7 ன்

வாயிலாக புலன் விசாரணை அதிகாரியாக தன்னை நியமித்து, 21.11.2024 அன்று தான் இவ்வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, மாலை 16.00 மணிக்கு சம்பவயிடமான லத்துவாடி ஊராட்சி மன்ற அலுவலகத்திற்கு முன்பு நியாயவிலைக்கடையில் இருந்த சாட்சிகள் சாந்தி, அ.சா.7 கைலாசம் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் அ.சா.ஆ.8 மாதிரி வரைபடம் அ.சா.ஆ.9 தயார் செய்ததாகவும், இவ்வழக்கின் வாதி அ.சா.1 கலைச்செல்வி, சாட்சிகள் அ.சா.2 சுபா, அ.சா.3 பூசன் ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், இவ்வழக்கின் வாதி மற்றும் எதிரிகளுக்கு சாதி சான்று கேட்டு திருச்செங்கோடு வட்டாட்சியருக்கு வேண்டுகோள் கடிதம் அனுப்பி வைத்ததாகவும், சாட்சிகள் அ.சா.4 சங்கீதா, அ.சா.5 குமுதா ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர் 24.11.2024 அன்று இவ்வழக்கின் சாட்சிகள் அ.சா.10 திரு.பழனி காவல் உதவி ஆய்வாளர், சத்தியராஜ் முதல் நிலை காவலர் ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, திருச்செங்கோடு வட்டாட்சியர் விஜயகாந்த் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அவர் வாதி அ.சா.1 கலைசெல்வி இந்து அருந்ததியர் எனும் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் என்று வழங்கிய சாதி சான்று அ.சா.ஆ.10 பெற்றதாகவும், மண்டல துணை வட்டாட்சியர் கலைவாணி என்பவரை விசாரித்து அவர் எதிரிகள் கோபாலகிருஷ்ணன், ஜெகநாதன் ஆகியோர் இந்து வன்னியர் வகுப்பை சார்ந்தவர்கள் என்று வழங்கிய சாதி சான்றுகள் அ.சா.ஆ.11 மற்றும் அ.சா.ஆ.12 ஆகியவற்றை பெற்றதாகவும், 23.12.2024 அன்று இவ்வழக்கின் எதிரிகளை தேடி சென்றபோது லத்துவாடி ரேசன் கடை அருகில் இருந்தவர்களை தகவலாளி அடையாளம் காட்ட எதிரிகளை விசாரித்தபோது குற்றத்தை ஒப்புக்கொண்டதன் பேரில் காலை 9.00 மணிக்கு எதிரிகளை கைது செய்து திரேக சோதனை செய்து தக்க வழிக்காவலில் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்ததாகவும், 27.12.2024 அன்று இவ்வழக்கு சம்மந்தமாக

எலச்சிப்பாளையம் வட்டார வளர்ச்சி அலுவலர் லோகமணிகண்டன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், 29.12.2024 அன்று அ.சா.6 சாட்சி சிவா (எ) ஹரிஹரன் என்பவரையும், 12.01.2025 அன்று இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த காவல் ஆய்வாளர் அ.சா.11 திரு.செல்வராஜ் என்பவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், 13.01.2025 அன்று இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து நாமக்கல் உதவி சட்ட இயக்குநர் அவர்களின் கருத்துரை பெற்று இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை BNS பிரிவுகள் 132, 75(1)(2) r/w 3(2)(va) of SC/ST (PoA) Act–ல் இருந்து BNS பிரிவுகள் 332 (c), 132, 75(1)(2) r/w 3(1)(r), 3(1)(s), 3(2)(va) of SC/ST (PoA) 2015 Act–ஆக மாற்றம் செய்த சட்டப் பிரிவு மாறுதல் அ.சா.ஆ.13 என்றும், இவ்வழக்கின் இறுதி அறிக்கையை எதிரிகளுக்கு எதிராக மேற்படி பிரிவுகளின் கீழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததாகவும் கூறியுள்ளார்.

**5.** அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலுள்ள எதிரிகளுக்கு பாதகமாக தோன்றும் சாராம்சங்களை இந்நீதிமன்றம் எதிரிகளிடம் பாரதிய நீதிச் சட்டப் பிரிவு 351 (1) (b) கீழ் வினவியபோது எதிரிகள் பொய்சாட்சி எனவும், சாட்சிகள் இல்லை எனவும் தெரிவித்துள்ளார்கள்.

**6. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில், எதிரிகள் மீதான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதேயாகும்?**

**7.** இருதரப்பு வாதங்கள், ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் ஆகியவற்றை முழுமையாக பரிசீலனை செய்ததில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.12 சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, அவர்கள் மூலமாக அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.13 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

இவ்வழக்கில் சான்றுப்பொருட்களாக எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எதிரி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**8.** அரசு தரப்பில், எதிரிகள் கோபாலகிருஷ்ணன் மற்றும் ஜெகநாதன் கடந்த 13.11.2024 அன்று லத்துவாடி ஊராட்சி மன்ற அலுவலகத்திற்குள் அத்துமீறி உள்ளே நுழைந்து சாட்சி கலைச்செல்வி பட்டியல் இனத்தை சார்ந்தவர் என தெரிந்தே அவரிடமும், சாட்சி சுபாவிடமும் பாலியல் தாக்குதல் புரியும் நோக்கத்தில் "சிரிக்கமாட்டீர்களா, எனக்கு கம்பெனி கொடுக்கமாட்டீர்களா" என ஆபாசமாக பேசி பாலியல் தொந்தரவு செய்தார் என்றும், சாட்சி சுபாவை அரசு பணியை செய்யவிடாமல், உள்ளே இருந்து போராட்டம் செய்வேன், வெளியில் செல்லமாட்டேன் என்று தடுத்த குற்றத்திற்காகவும், 2 வது எதிரி ஜெகநாதன் குற்றம் செய்யவேண்டும் என்ற நோக்கத்தில் மேற்படி ஊராட்சி மன்ற அலுவலத்திற்குள் நுழைந்து வாதி கலைச்செல்வி மற்றும் சாட்சி சுபா ஆகியோர்களை பார்த்து, வாதி கலைச்செல்வி பட்டியல் இனத்தைச் சார்ந்தவர் என தெரிந்தே அவரை அவமானப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில், "சக்கிலிச்சி நீ உனது வேலையைப் பார்" என பொது இடத்தில் வைத்து சாதி பெயரைச் சொல்லி திட்டி இழிவுபடுத்தி குற்றம் புரிந்ததாக எதிரிகளுக்கு எதிராக குற்ற சம்பவங்கள் இறுதியறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ளது.

**9.** மேற்படி சம்பவமானது 13.11.2024 அன்று மதியம் சுமார் 2.00 மணியளவில் நடைபெற்றதாக அரசு தரப்பில் இறுதி அறிக்கையில் எடுத்தரைக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த சம்பவம் குறித்து சாட்சி கலைச்செல்வியால் 4 நாட்கள் காலதாமதமாக 17.11.2024 அன்று தான் வேலகவுண்டம்பட்டி காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டு, மேற்படி புகாரின்மீது புகார் மனு ஏற்பு ரசீது

வழங்கப்பட்டு 20.11.2024 அன்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது வழக்காவணங்களை பரிசீலனை செய்த வகையில் இந்த நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

**10.** மேற்படி சாட்சி கலைச்செல்வி, முதலில் வட்டார வளர்ச்சி அலுவலரிடம் 14.11.2024 அன்று ஒரு புகார் கொடுத்துள்ளார். மேற்படி புகாரினை 15.11.2024 தேதியிட்ட கடிதத்துடன் வட்டார வளர்ச்சி அலுவலர் வேலகவுண்டம்பட்டி காவல் ஆய்வாளருக்கு பதிவு தபாலில் அந்த புகாரினை அனுப்பியுள்ளார். அந்த புகாரானது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட பின்னர் தான் புலன் விசாரணை அதிகாரியின் வசம் கிடைக்கப்பெற்றுள்ளது என்பது வழக்காவணங்களை பரிசீலனை செய்த வகையில் இந்த நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

**11.** இந்த நிலையில், அ.சா.1 சம்பவம் நடந்த மறுநாளே அதாவது 14.11.2024 அன்று வட்டார வளர்ச்சி அலுவலரிடம் மேற்படி குற்ற சம்பவங்கள் குறித்து அளித்த புகாரில் 1 வது எதிரி தன்னிடம், "சிரிக்கமாட்டீர்களா, கம்பெனி கொடுக்க மாட்டீர்களா" என்று பாலியல் ரீதியாக தொந்தரவு செய்ததாக எந்த வாசகங்களும் இடம்பெறவில்லை. அலுவலகத்தை பூட்ட முயற்சி செய்யும்போது பூட்டவிடாமல் தடுத்ததாக தெரிவித்துள்ளார். மேற்படி ஊராட்சி மன்ற அலுவலகத்தில், சாட்சி சுபா தனது பணியை செய்ய 1 வது எதிரி இடைஞ்சலாக இருந்ததாகவோ பணியை செய்ய விடாமல் தடுத்ததாகவோ எந்த சங்கதியையும் அந்த புகாரில் தெரிவிக்கவில்லை.

**12.** 8 வது வார்டு உறுப்பினரான 2 வது எதிரி ஜெகநாதன், 1 வது எதிரி கோபாலகிருஷ்ணனை உள்ளே வைத்து கதவை சாத்திவிட்டு, ஆபாசமாக பேசி தங்களிடம் தகராறு செய்ததாக சாட்சி கலைச்செல்வி 14.11.2024 தேதியிட்ட

புகாரில் தெரிவித்துள்ளார். ஆனால் அவரே 17.11.2024 அன்று அளித்த புகாரில், அரசு தரப்பு இறுதி அறிக்கையில் குறிப்பிட்டவாறு 1வது தன்னிடம் "கம்பெனி கொடுக்கமாட்டீங்களா, சிரிக்கமாட்டீங்களா" என்று பாலியல் ரீதியாக தவறாக பேசியதாகவும், அண்ணா போட்டோவை காணவில்லை என்றும், கலைஞர் போட்டோவை உடைத்துவிடுவேன் என்று மிரட்டியதாகவும், உள்ளிருப்பு போராட்டம் நடத்துவதாகவும் கூறியதாக தெரிவித்துள்ளார். அந்த புகாரிலும் சாட்சி சுபா அலுவலக பணியை செய்ய மேற்படி 1வது எதிரி இடைஞ்சலாக இருந்ததாகவோ, தடுத்ததாகவோ தெரிவிக்கவில்லை. 2வது எதிரிக்கு எதிராக 14.11.2024 அன்று சாதி ரீதியாக தன்னை இழிவுப்படுத்தியதாக சாட்சி கலைச்செல்வி எந்த சங்கதியையும் தெரிவிக்காத நிலையில், 17.11.2024 அன்று அவர் காவல்நிலையத்தில் அளித்த புகாரில், 8வது வார்டு உறுப்பினர் மதுபோதையில் அலுவலகத்தை பூட்ட விடாமல் தகராறு செய்தார் என்றும், கோபாலகிருஷ்ணனை உள்ளே வைத்து சாத்தினார் என்றும் தெரிவித்துள்ளார். ஆனால் அரசு தரப்பு இறுதியறிக்கையில் 2வது எதிரி குற்றம் செய்யும் நோக்கத்துடன் வந்து "சக்கிலிச்சி நீ உனது வேலையைப் பார் " என்று சாட்சி கலைச்செல்வியை பொது இடத்தில் வைத்து சாதி பெயரை சொல்லி திட்டியதாக 2வது எதிரிக்கு எதிராக குற்ற சம்பவங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

**13.** மேற்படி அ.சா.1 இந்நீதிமன்றத்தில் சாட்சியாக விசாரணை செய்யப்படடபோது, அரசு தரப்பு இறுதியறிக்கைக்கு ஒத்துரைத்து சாட்சியமளித்துள்ளார். ஆனால் 13.11.2024 அன்று மதியம் 12.00 மணிக்கு சம்பவம் நடைபெற்றதாக தெரிவித்துள்ளார். அவர் அளித்த இரு புகார்களிலும் மதியம் 2.00 சம்பவம் நடைபெற்றதாக தெரிவித்துள்ளார். மேற்படி அ.சா.1 தனது குறுக்குவிசாரணை சாட்சியத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"போலீசார் பஞ்சாயத்து அலுவலகத்திற்கு வரும்போது எத்தனை மணி இருக்கும் என்றால் 2 மணிக்குள் இருக்கும். போலீசார் வந்தபோது

என்ன நடந்தது என்று நான் வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். மறுநாள் பஞ்சாயத்து தலைவர் பூசனுடன் கலந்து ஆலோசித்துவிட்டுதான் புகார் அளித்தேன் என்றால் சரிதான். 16 ஆம் தேதி போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் என்ன நடந்தது என்று கேட்டார்கள். புகாரை பஞ்சாயத்து அலுவலகத்தில் வைத்து துணைத்தலைவருடன் கலந்து ஆலோசித்துவிட்டு கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். அவ்வாறு கலந்து ஆலோசித்துவிட்டு கொடுத்த புகாரிலும் 2–வது எதிரி ஜாதி பெயரை சொல்லி திட்டியதாக எந்த வாசகமும் நான் சொல்லவில்லை என்றால் சரிதான்."

மேற்படி அ.சா.1 தனது குறுக்குவிசாரணை சாட்சியத்தில், 2 வது எதிரி சாதி ரீதியதாக தன்னை இழிவுபடுத்தியதாக புகாரில் எந்த சங்கதியும் தெரிவிக்கவில்லை என்பதை ஒப்புக்கொண்டுள்ளார். 14.11.2024 தேதியிட்ட புகாரிலும் 17.11.2024 தேதியிட்ட புகாரிலும், 2 வது எதிரி அரசு தரப்பு இறுதியறிக்கையில் எடுத்துரைத்தவாறு குற்ற சம்பவத்தை செய்ததாக அ.சா.1 எந்த சங்கதியையும் தெரிவிக்கவில்லை. அவர் 1 வது எதிரியை அலுவலகத்திற்குள் வைத்து பூட்டிவிட்டு, அலுவலகத்திற்கு வெளியே நின்றதாக தெரிவித்துள்ளார்.

**14.** இந்நிலையில், சம்பவ சமயத்தில் அ.சா.1 உடன் பணி புரிந்த சுபா என்பவர் அ.சா.2 ஆக இந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், 13.11.2024 அன்று சுமார் 12.00 மணியளவில் 1 வது எதிரி கோபாலகிருஷ்ணன் குடிபோதையில் ஊராட்சிமன்ற அலுவலகம் வந்து கிளர்க் எங்கே என்று கேட்டதாகவும், அதற்கு கலைசெல்வி அவர் இன்று வரவில்லை என்று சொன்னதாகவும், அவரை வர சொல்லுங்கள் தான் அவரிடம் கேட்க

வேண்டும் என்று சொன்னதாகவும், உள்ளே வந்துவிட்டு, அவர் வெளியே போகாததால் தலைவர், துணைத்தலைவர், ஊராட்சி செயலர் எல்லோருக்கும் போன் செய்து சொன்னதாகவும், இந்த தகவலை கிளர்க்குக்கு போன் செய்து சொன்னபோது, அவர் போலீசுக்கு தகவல் சொல்வதாக சொன்னதாகவும், அப்போது கோபாலகிருஷ்ணன் உள்ளிருப்பு போராட்டம் செய்ததாகவும், வெளியே வரமாட்டேன் என்று சொன்னதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் 2 வது எதிரி அங்கு வந்ததாகவும், கோபாலகிருஷ்ணனை உள்ளே வைத்து அலுவலகத்தை சாத்திவிட்டதாகவும், கொஞ்ச நேரம் கழித்து கதவை திறந்து அவரும் உள்ளிருப்பு போராட்டம் நடத்துவதாக அலுவலகத்திற்குள் போய்விட்டதாகவும் தனது சாட்சியத்தில் தெரிவித்தள்ளார்.

**15.** மேற்படி அ.சா.2 ன் சாட்சியத்திலிருந்து 1 வது எதிரி பாலியல் ரீதியாக சாட்சி கலைச்செல்வியை தொந்தரவு செய்ததாக எந்த சங்கதியும் அவரது சாட்சியத்தில் இடம்பெறவில்லை. 2 வது எதிரி சாட்சி கலைசெல்வியை சாதி ரீதியாக "சக்கிலிச்சி நீ உனது வேலையை பார்" என்று சாதி பெயரைச் சொல்லி திட்டி இழிவுபடுத்தியதாக எந்த சங்கதியும் தெரிவிக்கவில்லை. அரசு தரப்பு இறுதியறிக்கையில் முன் வைத்த குற்ற சம்பவத்திற்கும், அ.சா.ஆ.1 புகார் மற்றும் வட்டார வளர்ச்சி அலவலரிடம் அ.சா.1 கலைச்செல்வி அளித்த அ.சா.ஆ.4 புகார் ஆகியவை முரண்பட்டு காணப்படுகின்ற நிலையில், அ.சா.1 ன் சாட்சியத்திற்கும், அவருடன் பணிபுரிந்ததாக சொல்லப்படும் அ.சா.2 சுபா என்பவரது சாட்சியத்திலும், முரண்பாடுகள் காணப்படுவதாக இந்த நீதிமன்றம் கருதுகின்றது.

**16.** இந்த நிலையில், சம்பவம் நடைபெற்றபோது அங்கு வந்த 100 நாட்கள் பணியாளர்களான அ.சா.4 மற்றும் அ.சா.5 ஆகியோரது சாட்சியங்களை பரிசீலனை செய்ததில், அவர்கள் வந்தபோது ஏற்கெனவே 1 வது எதிரி கோபாலகிருஷ்ணன் அலுவலகத்திற்குள் குடிபோதையில் உட்கார்ந்து இருந்ததாகவும்,

கலைசெல்வியும், சுபாவும் வெளியே உட்கார்ந்திருந்ததாகவும் தாங்கள் சீல் எடுத்து தருமாறு கேட்டதற்கு போலீஸ் வந்ததும் போகலாம் என்று கலைசெல்வி சொன்னதாகவும், அவர்கள் கிளம்பி செல்லும்போது 2 வது எதிரி ஜெகநாதன் அங்கு வந்து அவர்களை பார்த்து பஞ்சாய்த்து ஆபிசில் உங்களுக்கு என்ன வேலை, எதற்கு வருகிறீர்கள் என்று கேட்டதாகவும், வேலையாக வந்ததாக அவர்கள் சொன்னபோது, உள்ளே சென்று ஜெகநாதன், கோபாலகிருஷ்ணனிடம் சென்று பேசிவிட்டு, நீ உள்ளேயே இருந்து போராட்டம் பண்ணு என சொல்லிவிட்டு, 1 வது எதிரியை உள்ளே வைத்து ஜெகநாதன் அலுவலகத்தை பூட்டிவிட்டதாக தெரிவித்துள்ளார். மேற்படி அ.சா.4 சங்கீதாகவும் 2 வது எதிரி ஜெகநாதன் ஊராட்சிமன்ற அலுவலகத்திற்குள் குற்றம் செய்யும் எண்ணத்துடன் நுழைந்து மேற்படி சாட்சி கலைச்செல்வியை பார்த்து சாதிய ரீதியாக இழிவுபடுத்தி திட்டியதாக எந்த சங்கதியையும் தனது சாட்சியத்தில் தெரிவிக்கவில்லை.

**17.** இந்நிலையில், மற்றொரு சாட்சியான அ.சா.5 குமுதா, எற்கெனவே கோபாலகிருஷ்ணன் அலுவலகத்திற்குள் இருந்தபோது, தானும், சங்கீதாவும் ஊராட்சிமன்ற அலவலகத்திற்கு சென்றதாகவும், அப்போது கலைச்செல்வியை கோபாலகிருஷ்ணன் உள்ளே உட்கார்ந்து குடிபோதையில் பேசிக்கொண்டு இருப்பதாக சொன்னதாகவும், 2 வது எதிரி தங்களை பார்த்து பஞ்ய்த்து அலுவலகத்தில் என்ன வேலை என்று கேட்டதாகவும், அதற்கு தாங்கள் சீல் கட்டையை எடுத்து வருவதற்கு வந்ததாக அ.சா.4 மற்றும் அ.சா.5 சொன்னதாகவும், உங்கள் வேலை என்னவோ அதை தான் பார்க்கவேண்டும் என்றும், வேலை முடிந்தால் கிளம்ப வேண்டியதுதானே என்றும் தங்களை பார்த்து கேட்டதாகவும், பின்னர் 2 வது எதிரி, 1 வது எதிரியை பார்த்து நீ உள்ளிருந்து போராட்டம் செய், நான் வெளியே இருந்து போராட்டம் செய்கிறேன் என்று சொன்னதாக தெரிவித்துள்ளார். இவரது சாட்சியம் அ.சா.1, அ.சா.2, அ.சா.4

ஆகியோர்களது சாட்சியங்களுக்கு முரண்பட்டு காணப்படுவதாக இந்த நீதிமன்றம் கருதுகின்றது. அரசு தரப்பு இறுதியறிக்கையில், 2 வது எதிரிக்கு எதிராக முன்வைத்த குற்ற சம்பவங்களை நிரூபிக்கும் வகையில் அரசு தரப்பில் உரிய சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் இல்லை என்றே இந்த நீதிமன்றம் கருதுகின்றது.

**18.** அரசு தரப்பில் பொதுநபரான சிவா (எ) ஹரிஹரன் அ.சா.6 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவரது முதல்விசாரணை சாட்சியத்திலிருந்து, 1 வது எதிரி கோபாலகிருஷ்ணன் கடந்த 13.11.2024 அன்று ஊராட்சிமன்ற அலவலகத்திற்கு சென்று கிராம சபை கூட்டத்திற்கு தலைவர் வராததால், தற்போது அவரை பார்த்து கேள்வி கேட்க வேண்டுமென்றும், தலைவரை கூப்பிடுங்கள் என்று சொன்னதாக தனது சாட்சியத்தில் தெரிவித்துள்ளார். அதற்கு மேற்படி சாட்சி தாங்கள் கேட்டோம் என்று சொல்லி அவரை வெளியே வரச்சொன்னபோது, அவர் வரவில்லை என்றும், அதனால் தான் காவல்நிலையத்திற்கு தகவல் சொல்லிவிட்டு கிளம்பிவிட்டதாக தனது சாட்சியத்தில் தெரிவித்துள்ளார். தான் ஊருக்குள்போகும்போது ஜெகநாதன் இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்ததாகவும் தெரிவித்துள்ளார். மேற்படி அ.சா.6 1 வது எதிரி உள்ளிருப்பு போராட்டாம் நடத்தியதாகவோ, அ.சா.1 மற்றும் அ.சா.2 ஐ அரசு பணியை செய்ய விடாமல் தடுத்ததாகவோ எந்த சங்கதியையும் இந்த நீதிமன்றத்தில் தெரிவிக்கவில்லை. ஆனால் அதே அ.சா.6 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

> "2-வது எதிரி லத்துவாடி பஞ்சாயத்தில் 8-வது வார்டு உறுப்பினராக உள்ளார் என்றால் சரிதான். 13.11.2024 தேதியில் லத்துவாடி பகுதியில் 100 நாள் வேலை நடந்து கொண்டிருந்தது என்றால் சரிதான். அன்றைய தினம் ஜெகநாதன் 100 நாள் வேலை திட்டத்திற்கு JCB உபயோகப்படுத்தக்கூடாது என்று கேட்டார் என்றால் சரிதான். அப்போது

சங்கீதா மற்றும் குமுதா ஆகியோர் துணை தலைவர் சொன்னதன் பேரில் செய்வதாகவும் வேண்டும் என்றால் அவரை கேட்டுக்கொள்ளுங்கள் என்று சொன்னார் என்றால் சரிதான். அதனால் ஜெகநாதன் நான் துணை தலைவரை கேட்டுக்கொள்கிறேன் என்று சொல்லிவிட்டு சென்றுவிட்டார் என்றால் சரிதான். அந்த சமயத்தில் ஜெகநாதனுக்கும், துணை தலைவருக்கும் ஊர் பிரச்சனைகள் குறித்து ஜெகநாதன் கேள்விகள் எழுப்பியதால் 5 வருடங்களாக பேச்சு வார்த்தை இல்லை என்றால் சரிதான்."

**19.** மேற்படி அ.சா.6 ன் குறுக்குவிசாரணை சாட்சியத்திலிருந்து 2 வது எதிரிக்கும், பஞ்சாய்த்து துணை தலைவருக்கும் இடையே பேச்சு வார்த்தை இல்லை என்பதும் அவர்களுக்குள் ஒரு உட்பூசல் நிலவு வந்துள்ளது என்பதும் இந்த நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. இதனை புலன்விசாரணை அதிகாரி தனது குறுக்குவிசாரணை சாட்சியத்திலும் ஒப்புக்கொண்டுள்ளார். புலன்விசாரணை அதிகாரியான அ.சா.12 தனது குறுக்குவிசாரணை சாட்சியத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"2 ஆம் எதிரி 8–வது வார்டு உறுப்பினர் என்பதை தெரிந்துகொண்டேன். 100 நாள் வேலை திட்டத்தில் JCB இயந்திரம் பயன்படுத்துவது குறித்து ஏற்கனவே கிராம நிர்வாக அலுவலரிடம் புகார் கொடுத்துள்ளார்என்றும் அதனால் 2 ஆம் எதிரிக்கும் இந்த ஊராட்சியின் துணைதலைவருக்கும் இடையே முன் விரோதம் இருந்து வந்தது என்றால் அதற்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை. 2 ஆம் எதிரிக்கும், சாட்சி பூசனுக்கும் முன் விரோதம் இருந்ததா என்று நான் விசாரித்து தெரிந்துகொண்டேனா என்றால் அதுபற்றி சொன்னார்கள் ஆனால் அது இந்த வழக்கிற்கு சம்மந்தம் இல்லை என்பதால் அதுகுறித்து நான் நீதிமன்றத்தில் எந்த தகவலும் தாக்கல் செய்யவில்லை."

மேற்படி அ.சா.12 புலன்விசாரணை அதிகாரியின் சாட்சியத்தின்படி 2 வது எதிரிக்கும், மேற்படி பஞ்சாய்த்து துணை தலைவருக்கும் இடையே உட்பூசல் இரந்து வந்துள்ளது என்பது தெளிவாக தெரியவருகின்றது. 2 வது எதிரி அ.சா.1 ஐ சாதிய ரீதியாக இழிவுபடுத்தி பேசியதாக அ.சா.1 14.11.2024 அன்று வட்டார வளர்ச்சி அலுவலரிடம் கொடுத்த புகாரிலும், 17.11.2024 அன்று காவல் நிலையத்தில் புகாரிலும் எந்த சங்கதியும் இடம் பெறவில்லை. இந்நீதிமன்றத்தில் அளித்த சாட்சியத்திலும், அரசு தரப்பு இறுதியறிக்கையில் மட்டுமே 2 வது எதிரி சாட்சி கலைச்செல்வியை சாதிய ரீதியாக இழிவுபடுத்தியதாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

**20.** ஆனால் சம்பவ சமயத்தில் அ.சா.1 உடன், ஆரம்ப முதல் இறுதிவரை இருந்ததாக சொல்லப்படும் அ.சா.2 சுபா, அ.சா.1 ன் சாட்சியத்தை ஒத்துரைத்து இந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கவில்லை. அ.சா.2 தனது சாட்சியத்தில், 2 வது எதிரி சாட்சி கலைச்செல்வியை சாதி ரீதியாக இழிவுபடுத்தியதாக எந்த சங்கதியையும் தெரிவிக்கவில்லை. அரசு தரப்பில் 2 வது எதிரிக்கு எதிரான குற்ற சம்பவத்தை நிரூபிக்கும் பொருட்டு முன்னிறுத்தப்பட்ட ஒரே கண்ணுற்ற சாட்சி அ.சா.2 என்கின்ற வகையில், அ.சா.2 ன் சாட்சியம், அ.சா.1 ன் சாட்சியம் மற்றும் அரசு தரப்பு இறுதியறிக்கைக்கு ஆதரவாக அமையவில்லை என்றே இந்த நீதிமன்றம் கருதுகின்றது. எனவே 2 வது எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**21.** அ.சா.1 14.11.2024 அன்று வட்டார வளர்ச்சி அலவலரிடம் 1 வது எதிரி தன்னை பாலியல் ரீதியாக தொந்தரவு செய்யும் வகையில் மதுபோதையில், "சிரிக்க மாட்டீர்களா, கம்பெனி கொடுக்க மாட்டீங்களா" என்று சொல்லி தொந்தரவு செய்ததாக சொல்லப்படும் சங்கதிகளை மேற்படி புகாரில்

தெரிவிக்கவில்லை. பின்னர் வேலகவுண்டம்பட்டி காவல் ஆய்வாளரை முன்னிலைப்படுத்தி காவல் நிலையத்தில் கொடுத்த புகாரிலும் எந்த சங்கதியும் இடம் பெறவில்லை. அ.சா.1 அரசு பணியாளர் என்பதை நிரூபிக்கும் வகையில் புலன்விசாரணை அதிகாரி இந்த நீதிமன்றத்தில் எந்தவொரு ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை. இருப்பினும் அரசு தரப்பு சாட்சிகளின் வாய்மொழி சாட்சியங்களின் அடிப்படையில், அவர் ஒப்பந்த துப்புறவு பணியாளர் என்று மற்ற சாட்சிகள் தெரிவித்த போதிலும், மேற்படி துப்புறவு பணியை செய்வதில் அ.சா.1 க்கு எவ்வாறு 1 வது எதிரி இடைஞ்சலாக இருந்தார் என்பதை குறித்து அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சிகள் யாரும் இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கவில்லை. பாதிக்கப்பட்டதாக சொல்லப்படும் அ.சா.1 ம் தான் துப்புறவு பணியை செய்வதை தடுக்கும் நோக்கத்தில் 1 வது எதிரி செயல்பட்டதாக தனது சாட்சியத்தில் தெரிவிக்கவில்லை.

**22.** சம்பவ சமயத்தில் 1 வது எதிரி உள்ளிருப்பு போராட்டம் நடத்தியதாக மேற்படி பஞ்சாயத்தில் 100 நாட்கள் பணியாளர்களாக தலைவர் மற்றும் துணை தலைவரால் நியமனம் செய்யப்பட்ட அ.சா.4, அ.சா.5 மற்றும் துப்புரவு பணியாளரான அ.சா.1, அவருடன் பணிபுரிந்த ஒப்பந்த பணியாளரான அ.சா.2 ஐ தவிர அன்றையதினம் சம்பவ இடத்திற்கு சென்றதாக சொல்லப்பட்ட பொது நபர் சாட்சி அ.சா.6 மற்றும் சம்பவ சமயத்தில் மேற்படி ஊராட்சிமன்ற அலுவலகத்திற்கு சென்ற அ.சா.10 பழனி ஆகியோர் கோபாலகிருஷ்ணன் உள்ளிருப்பு போராட்டம் நடத்தியதாக தங்கள் சாட்சியங்களில் தெரிவிக்கவில்லை.

**23.** அ.சா.10 காவல் உதவி ஆய்வாளர் பழனி தனது சாட்சியத்தில், 13.11.2024 அன்று தானும், முதல்நிலை காவலர் சத்தயராஜும், லத்துவாடி ஊராட்சி மன்ற அலுவலகம் சென்றபோது கோபாலகிருஷ்ணன் என்பவர் உள்ளே

இருந்ததாகவும், ஜெகநாதன் என்பவர் அலுவலத்திற்கு வெளியே இருந்ததாகவும், கோபாலகிருஷ்ணன் உள்ளிருப்பு போராட்டம் நடத்தப்போவதாக சொன்னதாகவும், கோபாலகிருஷ்ணன் மற்றும் ஜெகநாதனிடமும் காவல் நிலையத்தில் புகார் அளிக்குமாறு தான் சொல்லவிட்டு வந்ததாக தனது சாட்சியத்தில் தெரிவித்துள்ளார்.

**24.** பொதுநபர் சாட்சியான அ.சா.6 சிவா (எ) ஹரிஹரன் தனது சாட்சியத்தில் அலுவலகத்திற்குள்ளே கோபாலகிருஷ்ணன் உட்கார்ந்திருந்தபோது, தான் அவர்களிடம் ஏன் உட்கார்ந்திருக்கிறீர்கள் என்று கேட்டதாகவும், தலைவர் கிராம சபை கூட்டத்திற்கு வராததால், தற்போது கேள்விகேட்க வேண்டும் என்று சொன்னதாக தெரிவித்துள்ளார். மேற்படி அ.சா.6 மற்றும் அ.சா.9 ஆகியோரது சாட்சியங்களிலிருந்து அரசு பணியை செய்யவிடாமல் மேற்படி சாட்சிகளை தடுக்கும் நோக்கத்தில், 1வது எதிரி செயல்பட்டதாக இந்த நீதிமன்றத்திற்கு தெரியவரவில்லை. ஏற்கெனவே 2வது எதிரிக்கும், துணைத் தலைவருக்கும் உட்பூசல் இருந்ததாக அரசு தரப்பில் எடுத்துரைக்கப்பட்டுள்ள நிலையில், 13.11.2024 அன்று நடைபெற்ற சம்பவத்திற்கு 4 நாட்கள் காலதாமதமாக துணை தலைவரை கலந்து ஆலோசித்துவிட்டு புகார் அளித்ததாக அ.சா.1ம் தனது குறுக்குவிசாரணை சாட்சியத்தில் ஒப்புக்கொண்டுள்ள நிலையில், புகாருக்கு பின்னர் இந்த வழக்கிற்கு ஏற்றவாறு குற்ற சம்பவங்கள் புனையப்பட்டு, கலந்து ஆலோசிக்கப்பட்டு, பின்னிட்டு சிந்திக்கப்பட்டு இந்த புகார் அளிக்கப்பட்டுள்ளதாக கற்றறிந்த எதிரிகள் தரப்பு வாதத்தில் நியாயம் இருப்பதாகவே இந்த நீதிமன்றம் கருதுகின்றது.

**25**. இந்த சூழ்நிலையில் எதிரிகள் தான் மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என்பதற்கு அரசு தரப்பில் போதிய சாட்சியங்கள், ஆவணங்கள் மற்றும் ஆதாரங்கள் இல்லை என்றும், மேலும் எதிரிகளுக்கு எதிராக இறுதி

அறிக்கையில் முன் வைத்த குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறியுள்ளதாகவே இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே சந்தேகத்தின் பலன்களை எதிரிகளுக்கு நல்கி எதிரிகளை இந்த குற்ற வழக்கிலிருந்து விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

**26. இறுதியாக,** 1 மற்றும் 2 எதிரிகளுக்கு எதிராக பாரதிய நீதிச் சட்டப் பிரிவுகள் 332(C), 75(1)(ii), 132 உ/இ 3(1)(r), 3(1)(s), 3(2)(va) of SC & ST (POA) Amendment Act 2015–ன் கீழ் முன்வைப்பப்பட்டுள்ள குற்றசம்பவம் அரசு தரப்பால் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என முடிவு செய்து, சந்தேகத்தின் பலன்களை எதிரிகளுக்கு நல்கி எதிரிகளை மேற்படி பிரிவுகளின் கீழ் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து பாரதிய நாகரீக சுரக்ஷா சன்ஹிதா சட்டப் பிரிவு 258–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

இவ்வழக்கில் சான்றுப்பொருட்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

இந்த தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் விரிவாக்கம் செய்து கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 12ம் நாளான இன்று திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

P SHANTHI

Digitally signed by P SHANTHI
Date: 2025.12.12 18:19:58 +1200

அமர்வு நீதிபதி,

சிறப்பு நீதிமன்றம், நாமக்கல்.

**அரசு தரப்பு சாட்சிகளின் பட்டியல்:–**

| | |
|---|---|
| அ.சா.1 | திருமதி.கலைசெல்வி |
| அ.சா.2 | திருமதி.சுபா |

| | |
|---|---|
| அ.சா.3 | திரு.பூசன் |
| அ.சா.4 | திருமதி.சங்கீதா |
| அ.சா.5 | திருமதி.குமுதா |
| அ.சா.6 | திரு.சிவா |
| அ.சா.7 | திரு.கலைசெல்வன் |
| அ.சா.8 | திரு.கவின்ராஜ் |
| அ.சா.9 | திரு.லோகமணிகண்டன் |
| அ.சா.10 | பழனி (காவல் உதவி ஆய்வாளர்) |
| அ.சா.11 | செல்வராஜு (காவல் ஆய்வாளர்) |
| அ.சா.12 | முருகேசன் (காவல் துணை கண்காணிப்பாளர்) |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்:-</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 17.11.2024 | புகார் |
| அ.சா.ஆ.2 | 21.11.2024 | பார்வை மகஜரில் உள்ள அ.சா.7-ன் 2-வது கையொப்பம் |
| அ.சா.ஆ.3 | 15.11.2024 | வட்டார வளர்ச்சி அலுவலர் வேலகவுண்டம்பட்டி காவல் ஆய்வாளருக்கு அனுப்பிய கடிதம் |
| அ.சா.ஆ.4 | 14.11.2024 | அ.சா.1 வட்டார வளர்ச்சி அலுவலரிடம் கொடுத்த புகார் |
| அ.சா.ஆ.5 | 17.11.2024 | புகார் மனு ஏற்பு ரசீது |
| அ.சா.ஆ.6 | 20.11.2024 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.7 | 20.11.2024 | மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.C.No.G4/964/23129/2024 |
| அ.சா.ஆ.8 | 21.11.2024 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.9 | 21.11.2024 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.10 | 12.12.2024 | கலைச்செல்விக்கு வழங்கப்பட்ட சாதிச்சான்றிதழ் |
| அ.சா.ஆ.11 | 12.12.2024 | கோபாலகிருஷ்ணனுக்கு வழங்கப்பட்ட சாதிச்சான்றிதழ் |
| அ.சா.ஆ.12 | 12.12.2024 | ஜெகநாதனுக்கு வழங்கப்பட்ட சாதிச்சான்றிதழ் |
| அ.சா.ஆ.13 | 13.01.2025 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |

**<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்:—</u>** —இல்லை—

**<u>அரசு தரப்பு சான்று பொருட்கள் :—</u>** —இல்லை

P SHANTHI

Digitally signed by P SHANTHI
Date: 2025.12.12 18:20:08 +1200

அமர்வு நீதிபதி,
பட்டியல் கண்ட ஜாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர்
வன்கொடுமைக்கு எதிராக விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம்,
நாமக்கல்.

**JUDGMENT**
**SPL.S.C.NO.19/2025**
**Date: 12.12.2025**